**தலைப்பு 407 - பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி மற்றும் மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி மற்றும் மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி மற்றும் மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி மற்றும் மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார மேம்பாட்டு பயிர்ச்செய்கை இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வைப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களுக்குரிய வைப்புக்களை செலுத்துதல் மற்றும் மீதிகளை கணக்கீடு செய்தலின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய நடவடிக்கைகள் அமைச்சின் கீழ் காணப்பட்ட 2019 ஆம் ஆண்டு முதல் இந்த அமைச்சின் விடயப் பரப்பிலிருந்து நீக்கப்பட்டிருந்த முஸ்லிம் சமய நடவடிக்கைகள் திணைக்களத்தின் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்குரிய ரூபா 25,477,120 ஆன வைப்புப் பணம் 2016 ஆம் ஆண்டு முதல் பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட போதும் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக முஸ்லிம் சமய நடவடிக்கைகள் திணைக்களத்திடம் விசாரித்த போது கட்டிட நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய முடியாதென்பதாகவும் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணத்தை விடுவிப்பதற்கு அல்லது வேறு நடவடிக்கையொன்றை மேற்கொள்வதற்கு எங்களுக்கு ஆலோசனையை பெற்றுத்தரமுடியாதென்பதாக கூறப்பட்டுள்ளது. | அமைச்சுக்கு உரித்தல்லாத திணைக்களத்தின் வைப்புப் பணத்தை வைப்புக் கணக்கிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) 04 கெப் வாகனங்களுக்கு கெனபி பொருத்துவதற்கு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையப்பட்ட ரூபா 1,400,000 ஆன காசோலை 2022 ஏப்ரல் 04 ஆந் திகதி பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு ஏப்ரல் 08 ஆந் | சேவையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் இந்த பெறுகைகள் நடவடிக்கைகள் இடம்பெற்ற போதிலும் சந்தையில் காணப்பட்ட பொருள் பற்றாக்குறையின் காரணமாக அந்த கெனபி பொருத்துவது | நிதிப்பிரமாணம் 215(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| திகதி அதில் ரூபா 1,300,000 க்கு உரிய நிறுவனத்திற்கு செலுத்தி எஞ்சியது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | தாமதமானது 03 மாதங்களும் 10 நாட்களுக்குள்ளும் 04 வாகனங்களுக்கு கெனபி பொருத்தப்பட்டதன் பின்னர் 2022.04.08 ஆந் திகதி அதற்கு உரிய காசோலை விடுவிக்கப்பட்டது. |

**1.6.2 கணக்காய்வு சான்றில்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 970,115 பெறுமதியான 04 கொடுப்பனவு வவுச்சர்களுக்கு உரிய உபகார சான்றுகள் முறையாக சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | குறைபாடுகளுடனான உபகார ஆவணங்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் குறைபாடுகள் எதிர்காலத்தில் இடம்பெறாத வண்ணம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 138(8) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீண்டெழும் செலவு விடயங்கள் 4 இன் மற்றும் மூலதன செலவு விடயமொன்றின் மொத்த ரூபா 3,135,000 ஆன முழுமையான தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | நிலவிய கொவிட்-19 தொற்று நிலைமை காரணமாக முதல் 06 மாதங்களுக்குள் இந்த செலவுகளை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டதுடன் அதன் பின்னர் இறுதி காலாண்டிலே நிதி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் கட்டாயமாக சேமிக்கப்பட வேண்டியதுடன் இந்த ஏற்பாடுகள் கட்டாயமாக சேமிக்கப்பட்டு பொதுத் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக மதிப்பீடு தயாரிக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) அபிவிருத்தி உதவிகள் வேலைத்திட்டத்திற்காக ரூபா 200,000,000 ஆன மதிப்பிடப்பட்ட ஏற்பாட்டிற்கு மேலதிகமாக குறைநிரப்பின் மூலம் ரூபா 150,000,000 ஆன ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்ட போதிலும் குறைநிரப்பு மதிப்பீட்டின் பெறுமதியையும் விஞ்சி ரூபா 248,547,930 ஆன | ரூபா 200 மில்லியன் ஏற்பாடுகளை உபயோகப்படுத்தி வெளிநாட்டு உதவிகளோடு சுகாதார வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டம் மூன்றாவது காலாண்டு வரை செயற்படுத்தப்படாததுடன் மூன்றாவது காலாண்டில் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் கட்டாய சேமிப்பை கருத்திற்கொண்டு அந்த ஏற்பாடு பொது திறைசேரிக்கு | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக மதிப்பீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | அறிக்கைப்படுத்தப்பட்டது. ரூபா 150 மில்லியன் ஏற்பாட்டை உபயோகப்படுத்தி ஆடுகளை வளர்த்தல் மற்றும் பயிரிடுதல் நடவடிக்கைகள் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட துடன் வருட இறுதியில் போதுமான அளவு கட்டுநிதி கிடைக்காமையும் காரணமாகும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 862,191 ஆன பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | பற்றுச்சீட்டுக்கள் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டதனால் நிதிக் கூற்றுக்களில் கடப்பாடு மற்றும் பொறுப்புக்களாக காட்ட முடியாதிருந்தது. | இறுதிக் கணக்குகளுக்காக பொறுப்புக்கள் சரியாக அடையாளப் படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றுநிருபத்திற்கு முரணாக மீளாய்வாண்டிலே செலவு விடயம் 02 இன் ஏற்பாட்டை விஞ்சி ரூபா 6,799,194 வுக்கான பொறுப்புக்களுக்கு கட்டுப்பட்டு இருந்தது. | கட்டுநிதி கிடைக்காததன் காரணமாக ரூபா 15 மில்லியனான பற்றுச்சீட்டுக்களுக்கு அந்த வருடத்தின் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முடியாததன் காரணமாக பொறுப்புக்கள் உருவாகியுள்ளது. 2020 மற்றும் 2021 வருடங்களின் ஏற்பாடுகளை ஈடுபடுத்தி ரூபா 8.3 மில்லியனை தீர்ப்பனவு செய்து 2021.12.31 ஆந் திகதியில் மேலும் தீர்ப்பனவு செய்ய வேண்டிய பொறுப்புக்கள் ரூபா 6.8 மில்லியனாகும். | சுற்றுநிருப அறிவுரைகளுக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்புக்களின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், ஒழுங்குகள் மற்றும் பிரமாணங்களுடனான ஏற்பாடுகளுடன் இணங்கா சந்தர்ப்பம் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

| அவதானிப்பு | | | |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய அரச நிர்வாக சுற்றுநிருபம் 30/2016 | மோட்டார் வாகனமொன்றின் உள்ளக திருத்த | திருத்த வேலைகளுக்காக குறித்த நிறுவனத்தினால் ரூபா 3,490,517.63 | வாகன திருத்த வேலை நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| ஆம் இலக்க 4.2 ஆம் பந்தி | வேலை ஒன்றிற்காக வாகனத்தை கழற்றி வேறு கராஜ் ஒன்றிற்கு கொண்டு செல்வதற்கு மீண்டும் பொருத்துவதற்காக ரூபா 101,412 தனியார் கம்பனி ஒன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள துடன் இவ்வாறான வாகனங்களை திருத்த வேலை செய்வதற்கு விசேட தன்மையுடனான வேறு ஏற்றுக் கொள்ளப்பட்ட வெளி கராஜ் ஒன்றிலிருந்து மதிப்பீடொன்றை பெற்றுக் கொள்வதற்காக ஒன்று சேர்க்க வேண்டியதுடன் ரூபா 101,402 ஐ செலுத்துவதற்கு நேர்ந்தது. | களுக்கு சுற்றுநிருப அறிவுரைகள் பின்பற்றப்பட வேண்டும். |

## 2.4 முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் சேவையை விட்டுச் சென்ற மற்றும் வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 440,464 ஆகும். | கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறியத் தருகின்றேன். | தாபனக் கோவை மற்றும் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கடனை அறவிடுவதற்கு, கடன் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.5 வங்கி கணக்கு செயற்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 மற்றும் 2020 வருடங்களில் விநியோகிக்கப்பட்டுள்ள ரூபா 10,979 பெறுமதியான மதிப்பிழந்த 02 காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 392 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி அந்த பெறுமதிகள் பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | மதிப்பிழந்துள்ள குறித்த காசோலைகளுக்கு பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ளாமல் புதிய காசோலையை விநியோகித்தல் அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு முடியாதென்பதால் அந்தப் பெறுமதி தற்காலிகமாக வைப்புக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. உரிய காசோலை தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டதுடன் மிக விரைவில் அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அறியத் தருகின்றேன். | நிதிப்பிரமாணம் 392 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டம் நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி மீளாய்வாண்டின் இறுதியில் இந்திய அரசின் உதவியின் கீழ் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 200,000,000 ஆன 3400 சுகாதார வசதியுடனான அலகுகளை மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த இலக்கை அண்மித்திருக்கவில்லை. | இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய ஆரம்ப புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று 2018.07.19 ஆம் திகதியில் இருந்து 2021.07.18 ஆந் திகதி வரை கையொப்பமிடப்பட்டுள்ளது. அமைச்சின் திருத்தத்தின் விளைவாக இந்த செயற்திட்டம் கால்நடைகள் பண்ணைகள் விருத்தி மற்றும் பால் மற்றும் முட்டை தொடர்பான கைத்தொழில் இராஜாங்க அமைச்சிற்கு பின்னர் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.<br><br>செயற்திட்ட செயற்பாட்டுக் குழுவை மீண்டும் நியமித்திருப்பதுடன் இந்த அனைத்து நடவடிக்கைகளும் உரிய அனைத்து நிறுவனங்களுடன் சம்பந்தப்பட்ட அவர்களின் பரிந்துரைகளுக்கு இணங்க நிறைவேற்றப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக கூடுதலான காலம் செலவாகும் என்பதை அவதானத்திற்கு முன்வைக்கின்றேன். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி குறித்த கால வரையறைக்குள் செயற்திட்டத்தை நிறைவேற்றி எதிர்பார்த்த இலக்கை அண்மித்திருக்க வேண்டும். |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கைக்கு தேசிய சிறு பொருளாதார பயிர்ச்செய்கை சார்ந்த பெறுமதியை ஒன்றுசேர்த்த உற்பத்தியை உருவாக்குவதற்கு உதவுதல் மற்றும் ஏற்றுமதிக்கு கைகொடுத்தல் மற்றும் ஆரோக்கியமான மக்களுக்காக சுகாதார வசதிகளை மேம்படுத்தல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக | பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி மற்றும் மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு கலைக்கப்பட்டதுடன் அதற்கு பதிலாக 2022.04.28 ஆந் திகதிய 2277/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கிராமிய பொருளாதார பயிர்ச்செய்கை | அமைச்சின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக இலக்குடனான வேலைகளை திட்டமிட்டதன் படி செயற்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அடிக்கடி அமைச்சின் விடயப்பரப்பு மாற்றமடைதலும் இதற்கு நேரடியாக பாதித்திருந்தது. | மற்றும் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு என்பதாக விவசாய வரைபு அமைச்சின் கீழ் நிறுவப்பட்டது. 2021 ஆம் ஆண்டிற்கான சுகாதார வசதிகளை மேம்படுத்திக் கொள்வதன் பொருட்டு இந்த அமைச்சிற்கு தேசிய நிதியத்தின் ஊடாக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தை செயற்படுத்தும் வல்லமை காணப்படவில்லை. | |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சிலிருந்து வேறு நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களுக்கு 07 சந்தர்ப்பங்களில் விநியோகிக்கப்பட்ட கட்டளையின் அடிப்படையில் விநியோகிக்கப்பட்டுள்ள அலுவலக உபகரணங்கள் உரிய நிறுவனங்களுக்கு கிடைக்கப் பெற்றதாக கிடைக்கப்பெற்ற கட்டளையின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கிடைக்கப்பெற்ற கட்டளையை பெற்றுக் கொள்வதற்காக தற்போது ஞாபகமூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | அமைச்சினாலும் வேறு பிரிவு/ உத்தியோகத்தர் களுக்கு விநியோகிக்கப் பட்ட பொருட்கள் சம்பந்தமாக கிடைக்கப்பெற்ற கட்டளையின் உறுதிப்படுத்தல் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 நட்டம் மற்றும் சேதம்

பின்வரும் அவதாணிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டிலே இடம்பெற்றிருந்த வாகன விபத்தின் ரூபா 78,330 ஆன நட்டம் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் இறுதி அறிக்கை மீளாய்வாண்டின் இறுதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த வாகனத்தின் விபத்து சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 104(4) இறுதி அறிக்கை தற்போது தயார்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதாக அறியத் தருகின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் குறித்த காலப்பகுதிக்குள் பரிசீலனைகள் நடாத்தப்பட்டு இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நிதிப்பிரமாணம் 104(4) பரிசீலனை அறிக்கையின் பிரகாரம் 09 வாகன விபத்துக்களின் நட்டமான ரூபா 923,118 வை அறவிடுவதற்கு மீளாய்வாண்டிற்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது அந்த நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியத் தருகின்றேன். | பரிசீலனை அறிக்கையின் பிரகாரம் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

**3.5 முகாமைத்துவ பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்தை அடையாளப்படுத்துவதற்கு சாத்தியவள ஆய்வொன்றின் ஊடாக செயற்திட்டத்தை நிறைவேற்றும் வல்லமை தொடர்பாக போதுமான அளவு மதிப்பீடொன்று மேற்கொள்ளாததன் காரணமாக உழுந்து, பயறு மற்றும் இஞ்சி பயிர்ச்செய்கை பிரயோகமாக நடைமுறைப்படுத்துவதற்கு முடியாதுபோன 05 மாவட்டங்களின் ரூபா 23,538,980 ஏற்பாடுகள் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | சில மாவட்டங்களில் திருப்பி அனுப்பப்பட்ட ஏற்பாடுகளை கூடுதலான பயனாளிகள் அளவு காணப்படுகின்ற மேலும் கூடுதலான ஏற்பாடுகளின் அளவை பெற்றுக் கொள்வதற்கு இணங்கியிருந்த மாவட்டங்களுக்கு பெற்றுக் கொடுத்து ஆக்கபூர்வமான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. | செயற் திட்டங்களை திட்டமிடும் போது செயற்திட்டம் சம்பந்தமாக சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4. நல்லாட்சி**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40(2)(1) ஆவதின் உப பிரிவின் பிரகாரம் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட தினத்திலிருந்து 02 வருடங்களை விஞ்சிடாத காலவரையறைக்குள் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பல சந்தர்ப்பங்களில் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்தின் படி உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் காணப்படுகின்ற பதவியணி வெற்றிடங்கள் 15 இல் பிரதான கணக்காளர், பிரதான உள்ளக கணக்காய்வாளர், பணிப்பாளர் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் ஆகிய சிரேஷ்ட மட்டத்திலானா பதவிகள் காணப்படுதல் அமைச்சின் செயலாற்றலுக்கு எதிரான நேரடி தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | 2021.12.31 ஆந் திகதியில் சேவை மட்டங்களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 15 ஆகும். இதில் பிரதான கணக்காளர், பிரதான உள்ளக கணக்காய்வாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் ஆகிய சிரேஷ்ட மட்டத்தினாலான பதவிகள் 2021.12.31 திகதியில் வெற்றிடமாக காணப்பட்டத. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரச சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப் பட்டுள்ள பதவியணி யினருக்குள் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |